பேராவூரணி தொகுதியில்

# தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பீர்!

## சட்டப்பேரவையில் பேராவூரணி என்.அசோக்குமார் வலியுறுத்தல்!

**சென்னை, ஏப். 21 - சட்டப்பேரவையில் பேராவூரணி தொகுதி உறுப்பினர் என். அசோக்குமார் பேசுகையில் பேராவூரணி தொகுதியில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**



சட்டப்பேரவையில் பேராவூரணி தொகுதி உறுப்பினர் என். அசோக்குமார் பேசியதாவது:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்மை வளர்த்து ஆளாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். எனக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மீதான மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்மை பாதுகாத்து, வழிநடத்திச் செல்கின்ற இந்திய அரசியல் வானின் துருவ நட்சத்திரம், திராவிட மாடல் நாயகர், நமது தலைவர் முதலமைச்சர் அவர்களை அன்புடன் வணங்குகின்றேன். நம் திராவிட இயக்கத்திற்கு எதிர்காலத்திற்கான நம்பிக்கை நட்சத்திரம், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவை முன்னவர் அவர்களையும், அரசுக் கொறடா அவர்களையும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கிக் கொள்கின்றேன்.

தஞ்சை மாவட்ட பொறுப்பு அமைச்சர் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். தஞ்சை நாடாளு மன்ற உறுப்பினர் முரசொலி அவர்களை வணங்குகின்றேன். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். சமூக நலன்மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அன்புடன் வணங்குகின்றேன்.

பேராவூரணி பேரூராட்சி மன்றத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றி, 52 ஆண்டுகளுக்குப் பிறகு பேராவூரணி தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்வு செய்த எனது நெஞ்சம் நிறைந்த பேராவூரணி தொகுதி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, வீரியங்கோட்டை கிராமத்தில் பிறந்த நான், குருவிக்கரம்பை, பூக்கொல்லை கிராமத்தைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மிசா மு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இரண்டாவது மகள் பரிமளாவினை திருமணம் செய்து வைத்த நமது கழகத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல என்னுடைய மகன்கள் கார்கி, கீர்த்தி என்ற என்னுடைய இரண்டு மகன்களுக்கும் பேராவூரணி தொகுதிக்கே வருகை தந்து திருமணம் செய்து வைத்த கழகத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், கிளை கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் தோழமை கட்சிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிறப்பாகச் செயல்படும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், DRO அவர்களுக்கும், மாவட்ட அலுவலர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வருகை தந்திருக்கின்ற மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் தலைவர் தீபக் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளின் நியமன முறையில் இட ஒதுக்கீடு வழங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு முதலில் எனது மனமார்ந்த நன்றியை உங்கள் எல்லோருடைய சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மானியக் கோரிக்கைகள் மீது உரையாற்றுவதற்கு முன் என்னுடைய தொகுதியைச் சார்ந்த கோரிக்கைகள் சிலவற்றை முன்வைக்க விரும்புகின்றேன்.

பேராவூரணி பகுதியில் தென்னை சார்ந்த அதிக விவசாய நிலங்கள் உள்ளதால், தென்னை சார்ந்த தொழிற்சாலை, தென்னை சார்ந்த ஆராய்ச்சி நிலையம் மற்றும் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எங்கள் பகுதி மீனவர் பகுதியாகும். மீனவ பெருமக்கள் அன்றாடம் கடலுக்குச் சென்று தங்களது உயிரை பணயம் வைத்து பல இக்கட்டான சூழ்நிலைகளைச் சந்தித்து வருகின்றனர். மீனவர்களுடைய நலன்களுக்காக பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### தொகுதி கோரிக்கைகள்!

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியானது 40 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை பகுதியாக உள்ளது. மீனவர்கள் இயற்கைச் சீற்றத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம் துறைமுகங்களில் தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பேராவூரணி கடற்கரைப் பகுதியில் மீன், இறால், நண்டு போன்ற கடல் உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு ஏதுவாக, ஒரு பெரிய குளிர் பதன சேமிப்புக் கிடங்கினை இப்பகுதியில் அமைத்துத் தர அன்புடன் வேண்டுகிறேன்.

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட 9 கடற்கரை முகத்துவாரங்களைத் தூர்வாரு வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கொள்ளுக்காடு ஆற்று முகத்து வாரத்தையும் இதனுடன் சேர்த்து, தூர்வாரி மீன்பிடித் தொழிலுக்கு உறுதுணையாக இருக்க அன்புடன் வேண்டுகிறேன்.

அழகிய மணல் பரப்பினைக் கொண்ட மல்லிப்பட்டினம், புதுப்பட்டினம் கடற்கரையை சுற்றுலாத் தலமாக மாற்றித் தர அதற்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுகிறேன்.

திருவோணம் தெற்கு ஒன்றியத்தில், புதியதாக ஒரு Polytechnic கல்லூரி அமைத்துத் தர அன்புடன் வேண்டுகிறேன்.

பெருமகளூர் பேரூராட்சியில் தனியாக ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பேராவூரணியில் நீதி மன்றம் அமைய நடவடிக்கை எடுத்த

முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நீதி மன்றத்திற்கு இட வசதியும், சொந்தக் கட்டடமும் தந்து உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணிக்கு தனியாக காவல் துணை கண்காணிப்பாளர் (DSP) அலுவலகம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

பேராவூரணியில் மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுகிறேன். அதேபோல, குறிச்சி, சீதாம்பாள்புரத்தில் அமையவுள்ள 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக அமைத்துத் தர வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகம் உருவாக்கித் தந்திட வேண்டுகிறேன். ஒட்டங்காடு, இரட்டைவயல் மற்றும் கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள செந்தலை வாயல் மற்றும் மல்லிப்பட்டினத்தில் ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது துணைச் சுகாதார நிலையமோ ஏற்படுத்தித் தர வேண்டுமென்று துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடி, பட்டுக்கோட்டை, பேராவூரணி ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளை ஒருங்கிணைத்து, தனி மாவட்டமாக உருவாக்கித் தர வேண்டுகிறேன். ஏனெனில், பேராவூரணி தொகுதியின் கடைக்கோடி பகுதியிலிருந்து தஞ்சை செல்வதற்கு 100 கிலோ மீட்டர் தொலைவு இருப்பதால், பொதுமக்களுக்கு கால விரயமும், பொருட்செலவும் ஏற்படுகிறது. எனவே, இதனை தனி மாவட்டமாக அறிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிடப் போராளி பட்டுக்கோட்டை அழகிரி மணிமண்டபத்தில் பூங்காவும், கழிப்பிட வசதியும் ஏற்படுத்தித் தருமாறு அன்புடன்கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி அரசு அறிவியல் கல்லூரிக்குத் தேவைப்படும் கூடுதல் பாடப் பிரிவுகள் மற்றும் தேவையான கட்டட வசதிகளையும் அமைத்துத் தருமாறு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்!

பேராவூரணியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டும். அலுவலகம், கிடங்குகள் மற்றும் கட்டடங்கள் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ், நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யை விநியோகம் செய்வதற்கு உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பொது விநியோகத் திட்டத்தின்கீழ், நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யை விநியோகம் செய்வதற்கு உதவிடுமாறு துறை அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் மறுபடியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரத்தநாடு தாலுகா, பஞ்சநதிக் கோட்டையில் அமைந்துள்ள அதிதிறன் நேரடி நெல் கொள்முதல் நிலையம்போல, பேராவூரணியில் அமைத்துத் தர வேண்டுகிறேன். பேராவூரணி பகுதியில் தென்னை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யும் வகையில், தென்னை சார்ந்த தொழில் பூங்கா அமைத்துத் தர தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் KVK சிறு தொழில் பயிற்சி மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் வேளாண்மைக் கல்லூரி வளாகத்திலுள்ள பயிற்சி மையம் அவர்களுடைய பொறுப்பில் இருப்பதால், நீண்டகாலமாக அது இயங்காமல், விவசாயி களுக்குப் பயன் பெறாமல் உள்ளது. எனவே, பேராவூரணி பகுதிக்கு KVK சிறு தொழில் பயிற்சி மையம் ஒன்றை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். பேராவூரணியில் சிறப்பு வாய்ந்த நெட்டை இரக

தேங்காய்க்கு. . .

பேராவூரணியில் சிறப்பு வாய்ந்த நெட்டை இரக தேங்காய்க்கு புவிசார் குறியீடு பெற்றிட நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் தென்னை அதிகமாக சாகுபடி செய்யப்படுவதுடன், அனைத்து தோட்டப் பயிர்களும் பயிர் செய்யும் வகையில் மண்வளம் மிக்க பகுதியாக உள்ளது. தென்னையின் அனைத்து பாகங்களும் பயன்தரக்கூடியதும், தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு தரக்கூடியதுமான ஒரு நீண்டகாலப் பயிராகும். தென்னையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்து விற்பனை செய்தால் மட்டுமே உற்பத்தியாளர்கள் பயன்பெற முடியும். இதற்கான பயிற்சிகளைக் கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த நிறுவனமான, KVK பயிற்சி மையம் அமைக்க வேண்டுகிறேன்.

தென்னையில் சுருள் வெள்ளை ஈக்கள் தாக்குதல் அதிகமாகவுள்ளது. இது தென்னையை அழித்துவிடும் சூழ்நிலை உள்ளது. எனவே, அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பேராவூரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேராவூரணி, சேதுபாவாசத்திரம் ஆகிய பகுதிகளிலுள்ள இரண்டு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இரண்டு வட்டாரங்களுக்கும் தனித்தனியாக புதிய சொந்தக் கட்டடம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலத்திற்கு புராதன வனேஸ்வரர் திருக்கோயிலுக்கு குட முழுக்கு விழாவிற்கு ஒரு கோடியே 28 இலட்சம் நிதியை உயர்த்திக்கொடுத்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு

எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரேஒருநிமிடம்தான். பேராவூரணியில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பில் அரசு மருத்துவமனையை அமைத்து தந்த துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராவூரணியில் இருக்கின்ற அனைத்து தரை மட்ட பாலங்களை உயர் மட்ட பாலங்களாக அறிவித்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேராவூரணியில் விளையாட்டுத் திடலுக்கு mini stadium அறிவித்த, துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கட்டடங்கள், அரசு கட்டடங்கள், அலுவலகங்கள் சாலை வசதிகள் அமைத்துத்தந்த முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதி குறித்த கோரிக்கைகளை பதிவு செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு, விடை பெறுகின்றேன். மிக்க நன்றி. (மணியடிக்கப்பெற்றது)

இவ்வாறு என். அசோக்குமார் பேசினார்.

---

லால்குடி தொகுதிக்கு ரூ.240 கோடியில்

# அனைத்து கிராமங்களுக்கும் கூட்டுக்குடிநீர்த் திட்டம்!

## சட்டப்பேரவையில் லால்குடி அ. சௌந்தரபாண்டியன் நன்றி!

**சென்னை, ஏப். 21 - சட்டப்பேரவையில் சமூக நலத்துறை மானியக் கோரிக்கையில் லால்குடி தொகுதி உறுப்பினர் அ. சௌந்தரபாண்டியன் பேசும்போது லால்குடி தொகுதியில் அனைத்து கிராம மக்களுக்கும் கூட்டு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தந்த முதல்வருக்கு நன்றி என்று குறிப்பிட்டுள்ளார்.**



சட்டப் பேரவையி அ. சௌந்தரபாண்டியன் பேசியதாவது:

மகளிருக்கு சமமான சொத்துரிமை, கல்வி, வேலைவாய்ப்புகள், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இட ஒதுக்கீடு என சட்டங்கள் வகுத்து, மகளிர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். ஆணுக்குப் பெண் இங்கே சமம் என்றும், மூன்றாம் பாலினத்தவர்களும் மனமகிழ்ச்சியோடு மரியாதையோடு வாழ வேண்டும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கையிலும் மொழிப் பற்று, தமிழ் இனப் பற்று ஆகியவற்றில் நமக்கு ஓர் இழப்பு என்றாலும், இழிவு என்றாலும் தன்மானம் காத்திட அனுதினமும் உழைத்து வரும் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

இளைஞர்களின் உயர்வுக்கு உழைத்திடு! அப்பணியால் உயர்ந்திடு! என்று கொடுத்த துறையின்மூலம் இந்திய ஒன்றியத்தில் தமிழ் நாட்டை முதல் மாநிலமாக மாற்றி, இல்லத்தரசிகளின் முன்னேற்றத்திற்காக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தியும், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் மூலம் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றியும் உழைத்து வரும் துணை முதல்வர் அவர்கள் வணங்குகிறேன். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் வைரமணி தியாகராஜன் அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கடந்த பத்தாண்டு காலமாக லால்குடி தொகுதிக்கு என்னால் இந்த மாமன்றத்தில் வைக்கப் பட்ட எந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. முதல்வர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்:

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

லால்குடி தொகுதிக்கு மட்டும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் செல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று அனைத்து கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர் சென்றடைய முதல்வர் அவர்கள் முதன்முதலாக லால்குடி தொகுதிக்கு ரூபாய் 240 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள்; அப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

அதேபோல், நீர்வளத் துறையின்மூலம் 124 கோடியே 43 இலட்சம் ரூபாயும், நகராட்சி நிர்வாகத் துறையின் மூலமாக 157 கோடியே 93 இலட்சம் ரூபாயும், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 179 கோடியே 56 இலட்சம் ரூபாயும், பொதுப் பணித் துறையின் மூலமாக 25 கோடியே 33 இலட்சம் ரூபாயும், சமூக நலத் துறையின் மூலமாக 2 கோடியே 29 இலட்சம் ரூபாயும், 376 பவுன் நகைகளும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பாக 4 கோடியே 2 இலட்சம் ரூபாயும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பாக 15 கோடியே 48 இலட்சம் ரூபாயும், கலைஞர் உரிமைத் தொகை 91 கோடியே 57 இலட்சம் ரூபாயும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமாக 234 கோடியே 76 இலட்சம் ரூபாயும் என ஆக மொத்தம் சுமார் 1,500 கோடி ரூபாய்க்கு மேலான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலால்குடி புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, பெருவளப்பூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கித் தர வேண்டுமாயும், இலால்குடி வருவாய் வட்டத்தைப் பிரித்து, புள்ளம்பாடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்றும், இந்த இரண்டு திட்டங்களுக்கும் பெருவளப்பூரிலும், புள்ளம்பாடியிலும் தனியார் இடத்தைத் தேர்வு செய்து, வாங்கி அரசுக்கு ஒப்படைத்துத் தர வேண்டுமாய் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

### மகளிர் விடியல் பயணத் திட்டம்

முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நன்னாளில் முதல் ஐந்து கோப்புகளில் கையெழுத்திட்டு திட்டங்களை துவக்கி வைத்தார். அந்த 5 திட்டங்களில் மகளிர் கட்டணமில்லா விடியல் பயணம் செய்யும் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டம் மகளிரிடத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதற்கு உதாரணம், இந்தத் திட்டத்தில் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை 40 சதவிகிதத்திலிருந்து 65 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. சராசரியாக 50 இலட்சம் மகளிர்கள் பேருந்துகளில் 642 கோடி முறை பயணங்களை மேற்கொண்டுள்ளனர். இந்தத் திட்டத்தால் ஒரு மகளிர் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 888 ரூபாயை சேமிக்கின்றனர். மகளிர்கள் வெகுவாகப் பாராட்டும் இந்தத் திட்டத்திற்கு, இந்த நிதியாண்டில் 3,600 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதை மனமுவந்து வரவேற்கின்றேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், தமிழ்நாடு இல்லத்தரசிகள் இடத்தில் மாபெரும் வரவேற்பைப் பெற்றுவிட்டது. ஆம், இது நிதர்சனமான உண்மை என்பதற்கு ஓர் உதாரணம், நமது முதலமைச்சர் அவர்களை எதிரியாகப் பாவித்துவரும் பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களிலேயே இந்தத் திட்டம்நிறைவேற்றப்பட்டு வருவதுதான். முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருந்துவரும் முதல்வரின் செயல்தான், திராவிட மாடல். ஆம், திராவிட மாடல் அரசின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றி நிறைவேற்றி வருகின்றன. மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப் பெறாத இல்லத்தரசிகள் விண்ணப்பித்திட, உரிய வாய்ப்பு விரைவில் வழங்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் அறிவிப்பை வெளியிட்டார் துணை முதலமைச்சர் அவர்கள். இதன்மூலம் இல்லத்தரசிகளின் மனங்களில் பெருமை பெற்றுவிட்டார். இந்தத் திட்டத்திற்காக, இந்த ஆண்டு 13 ஆயிரத்து 807 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கின்றேன்.

தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த தாய், தந்தை, சகோதரன், சகோதரிகள் என்று தன் குடும்பமே வெறுத்து ஒதுக்கும் நிலை யாருக்கு என்றால், தங்களுக்கு பிறந்த குழந்தை வளர, வளர குரலில் ஓசையின் ஒலி மாற்றத்தால், உருவத் தோற்றத்தால் மாறுபாடுகள் தெரிகின்றபோது, அய்யோ நமக்கு இப்படியொரு குழந்தை பிறந்துவிட்டதே என்றும், நமக்கு இப்படியொரு சகோதரன் இருக்கிறானே, நம்மை இந்தச் சமூகம் கேவலமாக நினைக்குமே என்று சகோதரன், சகோதரிகளும், இவர்கள் என்ன பாவம் செய்தனரோ தெரியவில்லை, இப்படியொரு பிள்ளை இவர்களுக்கு பிறந்துள்ளது என்று சமூகமும் இழித்தும், பழித்தும் அவர்களை அனைவரும் ஒதுக்கி வைக்கும்போது இது யார் குற்றம், என் குற்றமா என்று அவர்கள் மனம் படும் துன்பம் வேதனை நரக வேதனையைவிட கொடுமையானது அல்லவா என்பதையறிந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு தாயாக, தந்தையாக இருந்து, இந்தச் சமுதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் நிகராக சமமாக மூன்றாம் பாலினம் என்று ஒன்று இல்லை என்ற எண்ணத்தோடு அவர்களும் மனிதர்கள்தானே, அவர்களும் மனிதர்களாக வாழ வேண்டுமென்றும், அதுவும் கண்ணியத்தோடு அவர்கள் வாழ வேண்டுமென்றால், நாம் என்ன நமது அரசின்மூலம் அவர்களுக்கு உதவுவது சரியாக இருக்குமென்பதை உணர்ந்து, அவர்கள் கல்வி கற்றால் மட்டுமே சாத்தியமாகமென்று முதல்வர் அவர்கள், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் மூன்றாம் பாலினத் தவர்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்று அவர்களுக்கு எல்லா வகையிலும் தாயாக இருந்து விரிவுபடுத்தியுள்ளதும் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி கல்வி பயின்ற பின் பொருளாதாரத்தில் அவர்கள் உயர வேண்டுமென்றால், அவர்களுக்கு போக்குவரத்து மேலாண்மை மற்றும் திருவிழா காலங்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்காவல் படையில் ஈடுபடுத்திடவும், திட்டமிட்டு மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மதிப்பூதியும் மற்றும் பயிற்சி சீருடை போன்றவை ஊர்காவல் படையினருக்கு சமமான முறையில் வழங்கி, மூன்றாம் பாலினத் தவர்கள் சுயமரியாதை யுடன், ஆம் சுயமரியாதை யுடன்கூடிய வாழ்வை உறுதி செய்து அவர்கள் சமூக நீரோட்டத்தில் இரண்டற கலந்து வாழ்வதற்கு வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளவர் நமது முதல்வர் அவர்கள்.

மேலும், திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி உள்ளதை, மூன்றாம் பாலினத்தவர்களுடன் நாமும் சேர்ந்து முதல்வர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவியர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி கற்றிட முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் மூவாலூர் இராமா மிர்தம் அம்மையார் நினைவு புதுமைப்பெண் திட்டம். இந்த திட்டத்தில் மாதந்தோறும் 4 இலட்சத்து ஆயிரம் மாணவியர்கள் பயனடைந்து வந்தனர். இந்த திட்டம் நடைமுறைக்கு வந்த பின் உயர் கல்வி பயின்றிடும் மாணவியர்களின் சேர்க்கை விகிதம் 19 சதவிகிதம் அதிகரித்து 4 இலட்சத்து ஆயிரம் என்று இருந்தது, 40 ஆயிரத்து 276 மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாகி 4 இலட்சத்து 44 ஆயிரத்து 276 என்று உயர்ந்துள்ளதால் முதலமைச்சரின் இலட்சியக் கனவு நிறைவேறியுள்ளது.

### மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்கள்

இந்தாண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மாணவியர்கள் அப்பா, அப்பா என்று சொல்லி மகிழ்கிறார்கள். உங்களுக்கும் சேர்த்துதான். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகள் வழங்குவதற்கு தேர்வுகளை நடைமுறைப்படுத்திவரும், நான்கு சதவிகித இடஒதுக்கீட்டின் மூலம் 1,493 மாற்றுத் திறனாளிகளுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் அரசுப் பணிகள் வழங்கிய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதேபோன்று தனியார் துறைகளில் குறைந்தது 10 மாற்றுத் திறனாளிகளை நியமித்திருந்தால் அவர்களுக்கு மாதந்தோறும் ஒரு நபருக்கு 2,000 ரூபாய் வீதம் அரசு மானியமாக வழங்குவதை வரவேற்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைத் திட்டத்தின்மூலம் 10 வருவாய் கோட்டத்திலும் 38 வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் தொடங்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வு தேவைகளை நிறைவேற்றும் வகையில் அரசு ஆறு வகையான மறுவாழ்வு சிகிச்சைகள் ஏற்பாடு செய்து தர இந்த நிதியாண்டில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சேவை மையங்களை ஏற்படுத்துவது மாற்றுத் திறனாளிகளுக்கு பேருதவியான திட்டம் ஆகும்.

இந்த மாமன்றக் கூட்டத்தில் இன்று முதல்வர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சியில், ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சித் துறை, மாவட்ட ஊராட்சித் துறைகளில் தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்வு செய்து மக்கள் பணியாற்றலாம் என்று சட்டமுன்வடிவு கொண்டுவந்த முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

மகளிர் மனதில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கும் தொழில், தொழில் முனைவோர்களாக உருவாக்கவும், சமூகத்தில் பெண்கள் தங்களுக்கு உரிய இடத்தைப் பெற்றிட வேண்டுமென்ற நோக்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 36 ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்டதுதான் மகளிர் சுய உதவிக்குழு திட்டம். இதுவரை 4 இலட்சத்து 76 ஆயிரமாக இருந்துவந்த சுய உதவிக் குழுக்களை 4 இலட்சத்து 86 ஆயிரம் குழுக்களாக எண்ணிக்கை உயர்த்திடவும், சிறப்பாக குழுக்கள் செயல்பட்டிடவும் இந்த நிதியாண்டில் 37 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயித்திருப்பதை வரவேற்கிறேன்.

மகளிர், மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் போராடிப் போராடியே வெற்றி பெறுகின்றனர். அதேபோன்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் போராடி போராடிதான் வெற்றி பெற்று வருகிறார்கள். தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

### தொகுதிக் கோரிக்கைகள்!

லால்குடி தொகுதி இடையாற்றுமங்கலம் தண்ணீர் பந்தலுக்கும், ரீரங்கம் தொகுதி கிளிகூடு கிராமத்திற்கும் இடையே கொள்ளிடம் ஆற்றில் உயர்மட்டப் பாலம் கட்டித்தர வேண்டும்.

புள்ளம்பாடி திருமழாபாடி சாலையில் புள்ளம்பாடியில் இரயில்வே மேம்பாலம் கட்டித்தர வேண்டும்.

புள்ளம்பாடியில் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்டித்தர வேண்டும்.

பூவாளூர் பின்னவாசல் செம்பரைஆலங்குடிமஹாஜனம் சாலை, வெங்கடஜலாபுரம் ஆலங்குடிமஹாஜனம் சாலை, இடையாற்று மங்கலம்பச்சாம்பேட்டை திருமணமேடு சாலை, லால்குடிசாத்தமங்கலம் சாலை ஆகிய சாலைகளில் வாய்க்கால் பகுதிகளிலும், விவசாய நில பகுதிகளிலும் சாலையின் இருபுறங்களிலும் சிமெண்ட் தடுப்புச்சுவர் அமைத்து சாலைகளை அகலப்படுத்தித் தர வேண்டும்.

இவ்வாறு அ.சௌந்தரபாண்டியன் பேசினார்.